# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்கள். 1.SA 8229/விசாரணை/E/2024 & 2. CP 2942/விசாரணை/E/2024</u>**

திரு.M.முத்துமணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை,
பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 16.02.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.பாரதி 09.04.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டு அலுவலரின் 30.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு இனம் 3 மற்றும் 6-க்கான நிரந்தர/ தற்காலிக பணியாளர்களின் பெயர் விபரங்களை இணைத்து பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 09.04.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். 1.SA 8229/விசாரணை/E/2024 & 2. CP 2942/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை,
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

திரு.M.முத்துமணி
3/178 கண்டிதோப்பு, நல்லாம்பள்ளி,
கோலார்பட்டி அஞ்சல்,

Copy to: Files

RJ/PS 10.4